# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81*

Estabished: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 141 JAFFNA, FRIDAY, 14th AUGUST, 1981 No. 33

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE



### *Editor's Note*

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.



### *Subscription*

Inland: Rs. 35/- per year.
Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.
*Apply to:*
**The Manager,**
'Morning Star', Vaddukoddai.



SRI LANKA JAFFNA ARCHIVED 1981-9-2 PERIODICALS DIVISION LIBRARY


## Mahaveli Worksites face a labour crisis

One hundred heavy equipment operators had quit the Victoria and Kotmale projects, 60 have quit the Maduru Oya worksite 50 the Minipe Right Bank worksite and 35 the Victoria Power project site for lucrative West Asian jobs.

A two-member team from the Mahaveli Development Ministry leaves on 15-8-81 for Peking to negotiate with the Chinese government for obtaining heavy machinery operators.

Each operator would, we learn expect a monthly salary of 400 US dollars barring the cost of air travel, food, medical care and insurance which would have to be met by the authorities here.

Housing accomodation and transport facilities will also have to be provided.

## Census in India

The *Eleventh National Census in India* was completed recently. India's population stands at 683,810,051.

The dicennial headcount took 1.25 million enumerators working for about three weeks. 6000 tons of paper was used and the cost of the enumeration is some US 60 million dollars.

The land area in India is over 32,87782 square kilometres. The Indians are huddled 221 in each square kilometre. It would become 300 in 2000 AD.

79.5 per cent of the population live in villages. 48 per cent are under "the poverty line". There are 437 million unlettered Indians, 51 million more than ten years ago (i. e. 1971).

There are 935 women to a thousand men.

The population multiplies at the rate of 41,000 per day or 28 persons every minute.

## UN Doctors in Sri Lanka

Under the UN Volunteer Scheme now in operation there are 291 *foreigners* serving Sri Lanka's Development programmes. Of these 170 are *doctors* serving in the rural areas.

These include Filipino, Indian and Burmese nationals. In terms of the contract with Burmese Government, no Burmese doctor serving the Burmese government could be on contract with Sri Lanka for more than two years. New batches of Burmese doctors have to be brought in to fill vacancies of those whose contract expires.

The peripheral units throughout the country are served mostly by UN Doctors.

## JAFFNA DIOCESE OF THE CHURCH OF SOUTH INDIA
## ANNUAL DIOCESAN FESTIVAL – 1981

**Saturday, 29th of August, 1981**

at the

CATHEDRAL CHURCH, VADDUKODDAI

**PROGRAMME**

8-30 a. m. — **Holy Communion Service**
*Celebrant & Preacher:*
The Rt. Rev. D. J. Ambalavanar

11-00 a. m. — **Musical Variety**

12-30 p. m. — **Fellowship Lunch**

2-30 p. m. — **Public Meeting**
*Chairman:* Rt. Rev. D. J. Ambalavanar
*Speaker:* Mr. Jeyasingh S. David
*(Principal, Nuffield School for Deaf & Blind)*

4-00 p. m. — **Fellowship Tea**

All are cordially invited.

**Rev. Sam Thampoe**
Secretary

*JDCSI*

## Service of Thanksgiving

A Service of Thanksgiving for the life and Ministry of the *Revd. Samuel Ponniah Vijearatnam*, Presbyter of the JDCSI from 1932 to 1978 was held at the Tellippalai Church on Friday 7 8-81 at 430 p. m.

The Rev. Sam Thampoe, the Secretary of the JDCSI led the Service and the Rt. Rev. D. J. Ambalavanar, the Bishop of the Diocese preached the Sermon.

The Bible Lessons were read by Mrs. J. R. Mills and Mrs. A. S. Jebanayagam. Special lyrics were rendered by the members of the family and by the Tellippalai Church Choir.

*Mr. C. J. Eliathamby*, paying his tribute to the departed Presbyter said that Rev. S. P. Vijearatnam might not have had in abundant measure some of the qualifications we expect to find in Ministers of the Church.

But he did have one qualification which few others had and that was his ability to solve some delicate problems besetting members of the Parish. He is remembered more for this role he played in the day-to-day life of the congregation and for the concern he displayed in their welfare. A ministers life and work is many faceted. Rev. Vijearatnam's human touch is worthy of record.

*Rev. D. C. Ratnasingam* in his tribute recalled his student days at Union College, Tellippalai when he came under the influence of Rev. S. P. Vijearatnam, his Parish priest.

The pastor's unruffled disposition, his humanity and his dependablity to solve problems that were taken to him, marked him as a man who drew his power and strength from the Lord whom he served faithfully for 46 years.

Rev. D. R. Ambalavanar, the Presbyter of the Tellippalai Church offered the Litany of Thanksgiving.

The Service ended with Prayer and Benediction offered by the Bishop the Rt. Rev. D. J. Ambalavanar.

*Methodist Church*

## Confirmation Service at Point Pedro

A Service of Confirmation was held on Sunday, 9th August at 7.30 a. m. at the Point Pedro Methodist Church. Ten young people were admitted into the full membership of the Church.

The Revd. K. T. Muttiah, Superintendent of the Point Pedro — Kaddaively Circuit officiated, assissted by the Rev. P. J. Anandarajah, the Minister at Kaddaively and the Rev. S. Thevanesan

Mr. J. Rajasingam, Vice-President of the Methodist Church gave the message. He placed before the new members two key words — Discipleship and Commitment and explained the significance of these words. The Holy Communion Service, was followed by fellowship breakfast.

## The City of Colombo

Colombo is to be made strictly a residential commercial city expanding vertically over the next five years with some 180 multi-storeyed buildings.

Government Departments and Corporations will move to the new parliamentary capital of Sri Jayawardhanapura, Kotte.

Queen Elizabeth on her forthcoming visit would ceremoniously declare open the new 26 mile long Kotmale road — *Jaya Mawatha* — which is described as the finest highway in Sri Lanka today.

## IN MEMORIAM

IN LOVING MEMORY

OF

**Ireni Nesamalar Devendra**

younger daughter of Mr. E. A. Arnold and the late Mrs. Pavalam Arnold of Manipay.

Died 22 August 1978.

*"Gone from this earth to a better land we know*
*Where God's love and peace is yours forever more."*

Affectionately rememberd by, your children, father, brothers sisters and in-laws.

Arnold House,
Manipay.

## First Meeting of Anglican Doctrinal Commission

The Archbishop of Canterbury and the Secretary General of the Anglican Consultative Council have appointed *the Rt. Rev. Lakshman Wickremasinghe* as a member of the *International Anglican Theological and Doctrinal Commission.*

The Commission met for the first time from 20-7-81 to 1-8-81 to study "Church and kingdom in creation and Redemption", paying special attention to the "diverse and changing cultural contexts in which the gospel is proclaimed, received and lived".

*In brief*

O *The Advanced Level (August) Examination* on the new Syllabus commenced on 10-8-81 and concludes on 29-8-81. Some 50,000 candidates are appearing for this examination.

O *Navajeevanam* at Paranthan will celebrate the 50th Anniversary of Sister Elizabeth's Ministry on 6-9-81.

O *The Batticaloa University College* will be ceremoniously opened by President Jeyawardene on 5-10-81. It will have courses in Science and Agriculture and will be affiliated to the Peradeniya University. The College will admit 75 students.

O The first Singapore Exhibition of Christian Art was held from March 18 — 27 in the Orchard Road Presbyterian Church — Public response to the Exhibition was very encouraging.

# உதயதாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

## தாரகை ஒளி

உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் உள்ளத்தில் எல்லாம்உளன். — தமிழ்மறை

மலர் 141 ] 14 — 8 — 1981 [ இதழ் 33

## நாகநாதன் நினைவு

தமிழரசுக்கட்சியின் முன்னாட் தலைவரும், நல்லூர்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமாகிய டாக்டர் இ. மு. வி. நாகநாகநாதனின் நினைவு தினம் சென்ற ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது நல்லூரில் நடைபெற்ற மாபெரும் ஞாபகார்த்தக் கூட்டத்தில் இன்றைய தமிழ்த்தலைவர்கள் பலரும் நாகநாதன் போன்ற துணிச்சலும் ஆற்றலும் மிக்க தலைவர்கள்தான் நமக்கு அவசியம் தேவைப்படுகின்றனர் என்று குறிப்பிட்டனர்.

நாகநாதனின் வாழ்க்கைவரலாறும் அவரது அரசியற் பிரவேசமும் விளக்கமுடியாத புதுமையாக விருக்கின்றன.

எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நானென்றான்
இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்.

என்று மகாகவி பாரதியார் கண்ணனைப்பற்றிப் பாடிய பாடலே நாகநாதனைப்பற்றிச் சிந்திக்கையில் நமது உள்ளத்தில் ஏற்படும் உணர்ச்சியாகும்.

நாகநாதன் கொழும்பிலும் இலண்டனிலும் கற்றவர். சிங்களவர், பறங்கியர், ஆங்கிலேயர் போன்றவர்களுடன் தான் அவருடைய இளமைப்பராயம் கழிந்தது மேலைத்தேய நடனம், நகர் விளையாட்டு, மேற்கத்திய நாகரிகம் என்பனவற்றில் ஊறித்திளைத்தவர். இதனாலே தான் தமிழரசுக்கட்சியை இவர் சேர்ந்த பொழுது

எங்கிருந்தோ வந்தார் டாக்டர் தமிழ்ச்சாதி நானென்றார்
இங்கிவரை நாம் பெறவே என்ன தவம் செய்துவிட்டோம்.

என்று பலர் மனமுருகினர். தமிழ்மீது தாம் கொண்டிருந்த நன்மதிப்பினாலும் ஆர்வத்தினாலும் ஹென்ஸ்மன் என்ற தமது பெயரை இலங்கை முருகேசு விஜயரத்தினம் நாகநாதன் என்று மாற்றினார். தமிழரசுக் கட்சியார் நடத்திய பல போராட்டங்களிலும் முன்னின்று வழி நடாத்தியவர் 1961ம் ஆண்டு இவரை பொலிஸ்காரர் தடியினால் தாக்கிய பொழுது தடிதான் உடைந்தது நாகநாதன் எமது "இரும்பு மனிதன்" என்று மக்கள் இறுமார்ந்தனர். துணிவு, ஆற்றல், தன்னம்பிக்கை, தன்னலமறுப்பு பொதுவாக ஒரு தலைவனுக்கு வேண்டிய சகல தலைமைகளையும் நாகதாதன் பெற்றிருந்தார். அவருடைய பிற்காலம் சற்றுக் கசப்பானதாக அமைந்துவிட்டது நமது துரதிஷ்டமே. 1970ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அவர் தோல்வியடைந்தார் இழந்த செல்வாக்கினை அவரால் மீண்டும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. 1977ம் ஆண்டுத் தேர்தலுக்கு முன்னரேயே இவ்வுலக வாழ்வை நீத்தார்.

தமிழ்ப் பேசும் மக்களிடையே பல தலைவர்கள் தோன்றியுள்ளனர். ஆனால் நாகநாதனைப் போல சிங்களவர் பறங்கியர் மத்தியில் அன்னியோன்னியமாக உறவாடக் கூடிய உரிமையுடன் பழகக்கூடிய தலைவர்கள் அவருக்கு முன்பும் தோன்றவில்லை. அவருக்குப் பின்பும் தோன்றவில்லை இதுவே இந்த வீரத் தலைவனின் தனிப் பண்பாகும்.

நாகநாதன் இன்று நம்முடன் இல்லை. அரசியற் கூட்டங்களிலும், போராட்டங்களிலும் அவரது துணிச்சலான பேச்சுக்களை நாம் இனிக் கேட்கப்போவதில்லை. ஆனால் அவர் நினைவு நம்மோடு இருக்கின்றது. இலங்கை முருகேசு விஜயரத்தினம் நாகநாதனின் வீர வாழ்க்கை நமக்கு என்றும் வழிகாட்டியாக இருக்கட்டும்.

---

## கிறிஸ்தவ ஆசிரியர்களுக்குக் கருத்தரங்கு

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் கிறிஸ்தவம் போதிக்கும் ஆசிரியர்களுக்குக் கருத்தரங்குகளை நடாத்த கல்வித்திணைக்களம் முடிவு செய்துள்ளது. அக்டோபர் மாதம் 8ம் 9ம் திகதிகளில் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கும் 10ம் 11ம் திகதிகளில் சிரேஸ்ட பாடசாலை ஆசிரியர்களுக்கும் கருத்தரங்கு நடைபெறுமெனத் தெரிகிறது.

க. பொ. த. உயர்தர வகுப்பு (A. L.) ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் கத்தோலிக்க ஆசிரியர்களுடன் இணைந்து நடைபெறுமெனத் தெரிகிறது. இந்தக் கருத்தரங்குகளும் அக்டோபர் மாதம் பிற்பகுதியில் நடைபெறும்.

## அறுபதினாயிரம் நிதி உதவி

சமீப காலத்தில் இனக் கலவரங்களினாலும் பொலிசாரின் தாக்குதலினாலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கென தேசிய கிறிஸ்தவ சங்கம் (N. C. C.) அறுபதினாயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளது. இத்தொகையில் முப்பதினாயிரம் ரூபா யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும், முப்பதினாயிரம் ரூபா மட்டக்களப்பில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் வழங்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் இத்தொகையைப் பகிர்ந்தளிக்கும் பொறுப்பு யாழ்ப்பாணக் கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்திடம் (J. C. U.) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## கொழும்பு நகரில் சுவரொட்டிகள்

கொழும்பு நகரின் பிரதான இடங்களிலும், பஸ்வண்டிகளிலும், இனவாதத்தைத் தூண்டும் வகையில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளை பொலிசார் அப்புறப்படுத்தியுள்ளனர்.

இத்தகைய சுவரொட்டிகளை கடந்த ஞாயிறு திங்கட்கிழமைகளில் கொழும்பின் பிரதான இடங்களில் காணக் கூடியதாக இருந்தது. இச்சுவரொட்டிகள் தற்போதைய நாட்டின் நிலைமைக்கு மேலும் தூபம் இடுவதாக இருக்கின்றதென பொலிசார் தெரிவித்துள்ளனர்

கொழும்பின் பிரதான பொலிஸ் நிலையங்களில், கலகக்காரர்களை மடக்குவதற்கு பொலிஸார் உஷாராக வைக்கப்பட்டிருப்பதுடன், நாட்டின் சகல பாகங்களிலுமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கும், பொலிஸாரை விழிப்புடன் இருக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் குழப்பங்களை ஏற்படுத்துவதன்மூலம் கொள்ளை கொலை, தீவைப்புச் சம்பவங்களில் ஈடுபடும் காடையர்களை சுட்டுத் தள்ளும்படி பொலிஸ் தலைமையகம், விசேட அதிகாரத்தினை பொலிஸாருக்கு வழங்கியுள்ளது.

## பிறப்புச் சான்றிதழ் இல்லாதோர் அடையாள அட்டை பெற புது யோசனை

பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் இன்றி அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியாமல் கஷ்டப்படுவோர், தொடர்ச்சியாக 21 வருடங்கள் இலங்கையில் வசித்ததற்கான எழுத்துமூல ஆதாரங்களைச் சமர்ப்பிக்குமிடத்து அவர்களுக்கு அடையாள அட்டையை விநியோகிக்க ஜனாதிபதி, பிரதமர், இராஜாங்க அமைச்சர் ஆகியோர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாதோர், பிறப்பினை பதிவு செய்யாதோர் இலங்கையில் பிரஜாவுரிமை பெறுவதற்கு எதிர்பார்த்திருப்போர் ஆகியோர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாததால் அடையாள அட்டையைப் பெறமுடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த விடயத்தை கவனத்தில் கொண்டு இந்நாட்டில் 21 வருடங்கள் தொடர்ச்சியாக வாழ்ந்ததற்கு எழுத்துமூல அத்தாட்சிகளைச் சமர்ப்பிப்போருக்கு அடையாள அட்டை வழங்குவதற்கு ஜனாதிபதி பிரதமர் இராஜாங்க அமைச்சர் ஆகியோர் ஏற்பாடு செய்ய வேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றை கொழும்பு மாநகர சபையின் அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்க மாநகர சபை உறுப்பினர் திரு. வீ. ஏ பிரேமதாஸ முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

## கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் நிறுவ ஏற்பாடு

நாட்டில் கரும்புச் செய்கையையும் அதன் பக்க விளைபொருட்களையும் அதிகரிப்பதற்காக கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்காக கரும்பு ஆராய்ச்சி நிறுவகச் சட்டம் என்ற பெயரில் புதிதாகச் சட்டம் இயற்ற விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

உத்தேச நிறுவனம் நாட்டில் கரும்புச் செய்கையை அதிகரிப்பதற்கான ஆராய்ச்சித் திட்டம் ஆகியவற்றை மேற்கொள்ளும்.

## செய்திச் சிதறல்

### மூளாய் வைத்தியசாலைக்குப் புதிய வைத்தியர்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் புதிய வைத்தியராகத் திருமதி வஸந்தா எலியேசர் M. B. B. S. சேர்ந்துள்ளார். இவர் கொழும்புப் பல்கலைக்கழக தாவரவியல் விரிவுரையாளர் கலாநிதி குமார் எலியேசரின் துணைவியாவர். திருமதி எலியேஸர் இம்மாதம் 15-ந் திகதியிலிருந்து பணிபுரிவார் எனத் தெரிகிறது.

### யாழ்ப்பாணக் கல்லூரிச் சஞ்சிகையின் நூற்றாண்டு மலர்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சஞ்சிகை (THE MISCELLANY) 1879-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1979-ம் ஆண்டு இதன் நூறாவது ஆண்டு பூர்த்தியானது. இதனைக் குறிக்குமுகமாக இம்மாதம் யாழ்ப்பாணக் கல்லூரி ஒரு மலரை வெளியிட்டுள்ளது. இலங்கையின் தலைசிறந்த அறிஞர்கள். யாழ்ப்பாணக் கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவர்கள், ஆகியோரின் கட்டுரைகளையும். இயக்குனர் சபை உறுப்பினர்கள், தர்மகர்த்தாச் சபை உறுப்பினர்கள் ஆகியோரின் வாழ்த்துரைகளையும். அரிய புகைப்படங்களையும், வரலாற்றுக் குறிப்புக்களையும் தாங்கி இம்மலர் வெளிவந்துள்ளது.

### பாகிஸ்தானின் புதிய சட்டம்

காரியாலயங்களில் மெதுவாக வேலை செய்யும் போராட்டத்தில் கலந்துகொள்ளும் ஒவ்வொரு தொழிலாளிக்கும், சவுக்கினால் ஐந்து அடியும் ஐந்து வருடக் கடுங்காவல் தண்டனையும் விதிக்க பாகிஸ்தான் அதிபர் ஜியா உல் ஹக் உத்தரவிட்டிருக்கிறார்:

### புதிய கைக்கடிகாரம்

இஸ்லாமியர் தொழுகை நடத்த வேண்டிய நேரங்களில் அலாம் அடிக்கும் கைக்கடிகாரத்தை ஜப்பான் கைத்தொழில் நிறுவனம் ஒன்று தயாரித்திருக்கின்றது, ஐந்து தடவை அலாம் அடிக்கும் இந்தக் கைக்கடிகாரத்திற்கு, மத்திய கிழக்கு நாடுகளில் பெரும் வரவேற்பு காணப்படுகின்றது,

### அவுஸ்திரேலியாவில் ஆங்கிலேயர்

இங்கிலாந்திலிருந்து ஆங்கிலேயா அவுஸ்திரேலியாவில் குடியேறுவது இப்பொழுது அதிகரித்து வருகின்றது. 1980-ம் ஆண்டில் மட்டும் 1,24,000 பேர் இங்கிலாந்திலிருந்து அவுஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்துள்ளனர்.

### ரோமத்திலிருந்து வியாதி கண்டுபிடிப்பு

இங்கிலாந்து மருத்துவர்கள் ஒருவருக்குள்ள வியாதியை ரோமத்திலிருந்துதான் சுலபமாகக் கண்டுபிடிக்கலாம் என்று முடிவு செய்துள்ளனர். இரத்தம் சிறுநீர் இவற்றைவிட ரோமத்தில்தான் வியாதி அணுக்கள் 10 மடங்கு அதிகமாகப் படிகின்றன என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

### புதிய நாணயம்

பிரிட்டிஷ் இளவரசர் சார்லஸின் திருமணத்தை முன்னிட்டு அவுஸ்திரேலியா 50 சத நாணயம் ஒன்றினை வெளியிட்டுள்ளது.

# கடவுள் ஒளியாயிருக்கிறார்

*(1 யோவான் 1:5)*

கடவுளைக் குறித்து வேதாகமத்திலுள்ள இரண்டாம் மகா வாக்கியம், "கடவுள் ஒளியாயிருக்கிறார். அவரில் எவ்வளவேனும் இருள் இல்லை" என்பதே. வேதாகமத்தில் கடவுள் சொல்கிற முதலாம் வார்த்தை "வெளிச்சம் உண்டாகக் கடவது" என்பதாகும் (ஆதி. 1:3) இதனால் நாம் விளங்கிக்கொள்ள வேண்டியது கடவுள், தம்மை மனிதர் அறிந்துகொள்ள வேண்டுமென விரும்புகிறார் என்பதே. "வெளிச்சம் உண்டாகக் கடவது" என்பதன் பொருள் "நான் காணப்படுவேனாக" என்பதாம். ஒளியாயிருக்கிறார், கடவுள் தன்னைக் காண்பிக்கிறார், தம்மை மனிதருக்கு வெளிப்படுத்துகிறார் இவைகள் எல்லாம் ஒன்றே.

"என்னைக் கண்டவன் என் பிதாவைக் கண்டான்" எனத் தெட்டத் தெளிவாக இரட்சகர் வெளிப்படுத்தினார். கிறிஸ்து திடீரென இந்த உலகத்திற்கு வரவில்லை. உலகத்தின் தொடக்கம் முதல் கடவுள் செய்து வந்தவைகளை நிறைவேற்றவே வந்தார். பரி. யோவான் சுவிசேஷத்தில் 1-ம் அதிகாரம் முதல் பதினெட்டு வசனங்களும் அருமையான காட்சியை நம்முன் வைத்திருக்கின்றது. "கடவுளால் அனுப்பப்பட்ட ஒரு மனிதன் இருந்தான் அவன் பெயர் யோவான்" கடவுளின் பெயரால் மனிதருடன் பேசிய இறை வாக்குரைப்போரில் கடைசியானவன் இந்த யோவான்.

"கடவுள் ஒளியாயிருக்கிறார்" என்று கூறும்போது, இவர் நாம் நம்பத்தக்க கடவுள் என்ற இன்னொரு உண்மையையும் வெளிப்படுத்துகிறது. அதாவது மக்கள் தம்மைப் பற்றி அறிந்துகொள்ளக் கூடிய எல்லாவற்றையும், அவர்கள் அறிந்துகொள்ள வேண்டிய எல்லாவற்றையும் இயேசுவின் மூலமாகக் கடவுள் காண்பித்தார். "அவரில் எவ்வளவேனும் இருள் இல்லை" எனவே நாம் அவரை நம்பலாம். நமது வாழ்க்கையில் நாம் கடவுளைப் பற்றி அறிந்த எல்லாவற்றிலும் அவர் நம்பத்தக்கவர் என்பதை அனுபவித்துள்ளோம், அப்படியே நாம் அவரைப் பற்றி அறிய முடியாத எல்லாவற்றிலும், அவரது செயல்களைப் புரிந்துகொள்ள முடியாத எல்லாவிடங்களிலும் அவர் நம்பத்தக்கவரே என நாம் விசுவசிக்கலாம். வானமும் பூமியும் மாறாத நம்பத்தக்க கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவை. ஆகவேதான் அவை அப்படியிருக்கின்றன. கிழக்கிலே தோன்றும் சூரியன், இன்றும், என்றும் கிழக்கிலேதான் தோன்றுகின்றது. இன்று தண்ணீர் 212°F இல் கொதிநிலை அடைகிறது. நாளைக்கும் அப்படியேதான் நிகழும் என எண்ணிக்கொள்ளுகின்றோம். இதிலே ஒரு வேடிக்கை சிருஷ்டியை நம்பும் நாம் சிருஷ்டிகரை நம்பப் பின்னிற்கின்றோம். முதலில் கடவுளை நம்பி, அதனால் உலகத்தை நம்புவது புத்திக் கருத்தாகும்.

கடவுள் மாறாத தன்மையுடையவர். இந்த உண்மை வேதாகமத்தில் முதலிலிருந்து முடிவுவரை வற்புறுத்தப்படுகின்றது. நீங்கள் கடவுளை நம்பலாம் ஏனெனில் அவர் உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். கடவுளுக்கும் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கும் இடையேயுள்ள உறவு 'உடன்படிக்கை' எனும் வார்த்தையால் குறிப்பிடப்படுகிறது. இஸ்ரவேலர் தாம் கடவுளைத் தெரிந்துகொண்டதினாலல்ல கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்டபடியாலேயே கடவுளின் சனங்கள் எனப் பேர்பெற்றார்கள். உடன்படிக்கை கடவுளின் செயலாகவே இருக்கின்றது. தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அதை ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிவதன் மூலம் தமது பங்கைச் செலுத்த வேண்டும். எகிப்திலிருந்து மோசேயினால் மீட்கப்பட்ட இஸ்ரவேலர் வனாந்தரத்திலேயே ஓர் அற்புதமான அனுபவத்தைப் பெற்றார்கள். ஒரு மலை முழுவதும் நெருப்புப் பற்றி எரிந்துகொண்டிருந்தது. அதனூடே கடவுளின் வார்த்தைகளைக் கேட்டனர். இதனை அவர்கள் ஒருபோதும் மறக்கவில்லை. ஆனாலும் அவர்கள் வாழ்க்கையில் நடந்ததென்ன? கீழ்ப்படிவதனால் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆசீர்வாதங்களை கீழ்ப்படியாதவர்கள் இழந்துவிடுவார்கள் என்பதனை அறிந்துகொண்டனர். புதிய ஏற்பாட்டிலே இன்னொரு உடன்படிக்கையை இயேசு கிறிஸ்து ஏற்படுத்தினார். அதாவது பழைய உடன்படிக்கை புதுப்பிக்கப்படுகின்றது.

இந்தப் புதிய உடன்படிக்கை இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையின் கடைசி இரவில் நிறைவேற்றப்பட்டது. இந்த உடன்படிக்கை முன்னையதைப் போன்று ஒரு இனத்தவருக்கு மட்டுமல்ல எல்லா மனிதருக்குமுரியது. இந்த உடன்படிக்கையில் பங்குபெறும் உரிமை எல்லா மக்களுக்குமுண்டு. ஆனால் உலகில் வாழும் மக்களில் ஒரு பகுதியினர் இன்னும் கிறிஸ்துவின் பெயரைக் கேள்விப்படவில்லை. இந்தப் புதிய உடன்படிக்கையின் மக்கள்தான் கிறிஸ்தவர்கள். உடன்படிக்கைக்குப் புறம்பே இன்னும் மக்கள் இருக்கிறார்கள். கிறிஸ்தவர்களினால் இந்த உடன்படிக்கையின் உறவுக்குள் மற்றவர்களை அழைத்துவர முடியாவிட்டால் அவர்கள் கிறிஸ்தவர்களாக வாழவில்லை என்றே சொல்ல வேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கை எப்படியிருக்க வேண்டும் என்பதை இயேசு கிறிஸ்து வாழ்ந்த வாழ்க்கையைப் பார்த்து அறிந்துகொள்ளலாம். கடவுள் எப்படிப்பட்டவர் என்பதையும் மனிதன் எப்படியிருக்க வேண்டும் என்பதையும் இயேசு கிறிஸ்துவே காட்டினார். கடவுளிடத்தில் பரிபூரண அன்பையும், மனிதரிடத்தில் தீயவர்களிடத்திற்கூட பரிபூரண அன்பையும் அவர் காட்டினார். நாமெல்லாம் மனித ரூபமாக அதாவது கிறுக்கி வரைந்த (மனிதரூப) சித்திரங்களைப்போல் இருக்கின்றோம். உண்மையான மனித ரூபமெடுத்தவர் அவரே. அவர் ஒரே சமயத்தில் சிறந்த அறிஞராகவும் வெகு சாதாரண மனிதராகவும் காணப்பட்டார். அவர் வெகு தைரியசாலியாகவும் அதே சமயத்தில் உணர்ச்சி மிகுந்தவராகவும் காணப்பட்டார். தாம் மிகவும் நல்லவர்கள் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்களிடம் மிகவும் கடுமையாக நடந்துகொள்கிறார்.

ஆனால், அதேசமயத்தில் தாம் நல்லவர்கள் அல்ல என்பதை உணர்ந்தவர்களிடம் மிகவும் தயவோடு பழகுகின்றார். பரி. பவுல் (கலா. 5:22) "அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்' என மக்களின் நற்குணங்களை அழகாகக் கூறுகின்றார் இவைகள் மற்றவர்களிடம் காணப்பட வேண்டும் என்பதை நாம் விரும்புகின்றோம். இவையே நம்மிலும் இருக்க வேண்டிய குணங்கள். இவற்றுள் ஏதாவது இயேசுக்கிறிஸ்துவில் பரிபூரணமாகக் காணப்படாமல் இருந்ததா? கடவுள் தாம் எப்படிப்பட்டவர் என்பதை நாம் நன்றாக அறியவேண்டும் என விரும்பினார், அதை ஒரு மனித வாழ்க்கைமூலம் வெளிப்படுத்தினார். இதன் நோக்கம் நாம் கடவுளைப் போலாக வேண்டும் என்பதே. ஒரு மனிதன் கடவுளைப் போலாகி அவரோடு உறவு பூண்டு வாழும் பொழுதே உண்மையான மனிதனாகிறான். "இச்சையில் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு (2 பேதுரு 1:4) கடவுளைப் பற்றிய அறிவு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது எனப் புதிய ஏற்பாடு கூறுகின்றது. கடவுளைப் பற்றிய அறிவு ஒரு கடமையை நமக்குத் தருகின்றது. நாம் கடவுளைப் போல் ஆகவேண்டும்.

இது நமக்குக் கஷ்டமல்லவா? நாம் இதற்காக என்ன செய்யலாம் என்றல்ல கடவுள் இதற்காக என்ன செய்திருக்கிறார் என்றே நாம் சிந்திக்க வேண்டும். கடவுள் ஜீவனை அளிப்பவராக நம்மிடம் வருகிறார். அவர் ஒளியாக நாம் தம்மை அறிய வேண்டுமென விரும்புகின்றார். காத்திருக்கிறார்.

---

## செய்திச் சிதறல்

### பூச்சி பற்றிய ஆராய்ச்சி

இதுவரை உலகில் 6,60,000 பூச்சிகள் அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்னமும் இந்தப் பட்டியல் முடியவில்லை. அணு ஆயுத யுத்தம் வந்தால் மனிதர்கள் இறந்து போவார்கள். ஆனால் பூச்சிகள் மட்டும் உயிரோடு இருக்கும். அவைகள் பூமிக்குக் கீழே உயிர் தப்பிவிடும் எனக் கூறப்படுகின்றது.

### தமிழ் நாட்டுக்குப் புதிய தலைநகர்

தென்னிந்திய மாநிலமான தமிழ் நாட்டிற்குப் புதிய தலைநகர் அமைக்கப்படவிருக்கின்றது. சென்னை தமிழ்நாட்டில் வடகோடியில் இருப்பதாலேயே இம்மாற்றம் செய்யப்படவிருக்கிறது. ஆந்தத் தலைநகர் திருச்சிக்கும் தஞ்சாவூருக்கும் இடைப்பட்ட ஓரிடத்தில் அமையும் எனத் தெரிகிறது. சென்ற பொதுத்தேர்தலில் சென்னையிலுள்ள 14 தொகுதிகளில் 13-ல் எதிர்க்கட்சியான தி. மு. க. வெற்றிபெற்றது சண்டு குறிப்பிடத்தக்கது.

### புதிய நற்செய்திப் பணிப்பாளர்

தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் நற்செய்தி பணிப்பாளராக வண. எஸ். மனோபவன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சென்ற ஜூலை மாதம் அமெரிக்காவிலிருந்து திரும்பினார். தற்சமயம் கொழும்பில் பணியாற்றி வருகின்றார்.

### வண. N. கதிரவேலு இளைப்பாறுகின்றார்

பண்டத்தருப்பு ஊழியன் வண. N. கதிரவேலு இந்த வருட இறுதியில் இளைப்பாறுகின்றார்.

### உடுவில் மகளிர் கல்லூரியின் புதிய அதிபர்

உடுவில் மகளிர் கல்லூரியின் புதிய அதிபராகச் செல்வி C. V. செல்லையா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதுவரை காலமும் உடுவில் மகளிர் கல்லூரியின் உதவி அதிபராகப் பணியாற்றியுள்ளார். இவர் அடுத்த ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து பணியாற்றுவார் எனத் தெரிகிறது.

---

தென்னிந்திய திருச்சபை

## யாழ்ப்பாண அத்தியட்சாதீனம்

# வருடாந்த விழா

**29-8-1981 — சனிக்கிழமை**

## வட்டுக்கோட்டை

**நிகழ்ச்சிகள்**

மு. ப. 8.30 மணி: திருவிருந்து ஆராதனை

ஆசரிப்பும் பிரசங்கமும்:

**மகா கனம் D. J. அம்பலவாணர்**

மு. ப. 11.00 மணி: சங்கீத நிகழ்ச்சிகள்

மு. ப. 12.30 மணி: ஐக்கிய மதியபோசனம்

பி. ப. 2,30 மணி: பகிரங்கக் கூட்டம்

தலைவர்:

**மகா கனம் D. J. அம்பலவாணர்**

பேச்சாளர்:

**திரு. ஜெயசிங்கம் எஸ். டேவிட்**

அதிபர் நவீல்ட் செவிடர் குருடர் பாடசாலை

பி. ப. 4.00 மணி: தேநீர் உபசாரனை

**அனைவரும் உளங்கனிந்து அழைக்கப்படுகின்றனர்.**

சாம் தம்பு

செயலாளர்

*EDITORIAL*

## Our Primary Schools

Getting a child admitted to a school of the parent's choice is, we note, nothing short of an achievement in Sri Lanka today.

Private denominational schools are in great demand, especially for the younger children beginning their school career.

Months ahead of the new academic session (which begins in January) the most discussed topic among young parents is how to get their beginner admitted to a particular private school.

A city parent who got his child finally admitted to a school of his choice last year, made the acid comment to us that if the total phenomenon of his child's admission was published, perhaps the increasing rate of population growth in Sri Lanka could be arrested.

But it should be admitted that the experience is equally depressing to the heads of Private denominational schools, in the country. Places are limited and so are the resources. Where do they draw the line?

'Difficult' parents or disgruntled sponsors of parents can become a griping problem. For this reason, certain schools have an interview for "parents" also to ensure not merely that the deserving child gets into the school but the 'deserving' parent also.

The nervous dither of parents is understandable. Good education at the basic level for the child is hard to find except in schools *which have had a tradition* of teaching the child in a happy environment.

We are afriad that schools with such traditions are fast disappearing for the simple reason it is difficult to find young teachers today with qualifications in Speech, 'Drama, Music, Art, Aesthetics etc., etc. Secondary Schools in the country do not provide courses at any level in these subjects.

It is a pity that Western Music, for instance, is not taught as a subject in the curriculum in our Girls' Schools. At one time, girls did appear from our schools for the Speech Examination of the Trinity College of Music London and some did offer Western Music as a subject for the OL Examination.

The future of Primary Education in this country depends ultimately in our view, on the educational vision of our Girls' Schools.

The State no doubt is doing its best to upgrade the quality of its Primary Schools. It has spent and is spending a good amount on buildings and equipment. But unfortunately the required staff is a pressing problem for the government.

Training Colleges for teachers specialising in work in the initial grades have a very important role to play in improving the quality of teaching in our primary schools.

If selection is made to these training colleges on a competitive examination and an Interview as of old, it would be possible to attract good talent to the Training Colleges, provided our schools provide such talent.

The word *school* derives from the Greek word "*Schole*" which means *leisure*. Many of our Primary Schools in the country need to be reminded of the importance and relevance of this meaning.

## Anticipatory and Confirmatory Baptism

(FOR COMMENTS AND SUGGESTIONS)

*by* **Dr. Lynn de Silva**

*(Continued from last issue)*

Laying on of hands and a subsequent act of baptism are recognized as acts of confirmation.

(a) The disciples in Samaria received Christian baptism (Acts 8:12), but they received the Holy Spirit by the laying on of hands (8:14-17). Baptism was confirmed by the laying on of hands.

(b) The disciples at Ephesus who received John's baptism earlier were baptized again with the laying on of hands (19:1-7). In this example the anticipatory and the confirmatory aspects are very clear: "And Paul said, John baptized with the baptism of repentence, telling people to believe in the one who was to come after him, that is Jesus" (V. 4). This is clearly anticipatory. Then, "on hearing this they were baptized in the name of the Lord Jesus Christ." (V. 5). This act of baptism did not annul the earlier one but confirmed it. They must be considered as two acts of one baptism.

It must be stressed that there is only one baptism (Gal. 4:5)-According to 8 (a) baptism follow. by laying on or hands can be regarded as one baptism, the latter confirming the fist act. In the light of this, the practice of baptism followed by confirmation is justified, and those who have gone through this process must be assured that their baptism is complete. However, according to 8 (b) there can be two acts of one baptism, one confirming the other. There could be no objection therefore, of infant baptism being followed by adult baptism, the one being anticipatory and the other confirmatory. This practice if adopted, will be a major break-through, in the present impasse regarding baptism.

*(Concluded)*

## 'With People': a Meditation

Many people read newspapers today without believing a word of what they say. Instead they ask themselves: Why is that news on that page? How does it relate to the rest of the news? What does it seek to promote? What is the actual news behind it?

When applied to the Bible this is called Higher Criticism — textual or form criticism, the process of redaction. Scholars pursue it vigorously.

News seeks to inform, conceal,, mislead, provoke.

Sometimes it may also provide us with material for a meditation on our Assembly theme: "Living in Christ With People." Like the following news item, for example, from the *Ceylon Daily News* of 23 July 1980:

"God, not people" main concern — Khomeini.

Iranian leader Ayatollah Ruhollah Khomeni has told a body set up to scrutinise legislation adopted by the Majlis (Parliament) that their main consideration should be "God not people"...

Telling council members they must evaluate legislation so that it was "one hundred per cent Islamic" he said, "Do not listen to the words of those who want to please a small group of people and are so-called progressive. Fight against this sort of thinking decisively. Consider God. Basically the factor to be taken into consideration is God, not people."

**Underlying Temptation**

Our meditation will not of course be centred on the controversial Imam. Nor would we seek to find out whether the Koran in fact says 'God, not people'. Our only concern here is with the underlying temptation to which a great many 'religious' people, especially Christian people, seem to succumb. It is the temptation to save God.

Take a brief look at our Christian past. Our history is in part a history of bloodshed and wars, of condemnations and judgements, of shutting out, of people who did not think the same way as we did, of doctrinal high walls, of impenetrable theological structures — all these to defend faith and keep it pure, to save God from people. We seem to agree with the Imam if not with Koran: "Basically the factor to be taken into consideration is God, not people."

And yet, Jusus Christ seems to point to a God who is vulnerable, defenceless, and extravagant in his concern for the people. Does not Paul speak of this God as emptying himself' and taking the 'form of a servant' and becoming 'obedient unto death' (Philippians 2:7, 8)?

**Reaching out to People**

Jesus Christ pulled down the barriers erected by the 'religious' of his time. He laid aside law custom and tradition as these were understood by his contemporaries, reaching out his hands to people, and announcing the good news that God is with them (Luke 4:18).

If such solidarity between God and his people is intolerable, and if one of the two is to be 'eliminated', then it is God who must pay the price, not the people. Such indeed is the foolishness of the cross!

**Protecting God**

While the 'religious' are busy protecting God and following a faith unstained by sin, the Bible speaks of a God who is so keen to be reconciled to the people that he "made the sinless one into sin, so that in him we might become the goodness of God" (II Corinthians 5:21, Jerusalem Bible).

While the 'religious' say that even the whole of humankind may be wiped out to save God, the God of the Bible says that even God himself can be 'eliminated' on the cross to save a single lost sheep.

"The factor to be taken into consideration", the Bible seems to say, "is people, not God."

For the simple reason that God can look after himself. But people cannot save themselves. They need God's protection and his sustaining presence. They need one another in Christ.

**Re. S. Wesly Ariarajah**

*(Courtesy: CCA News)*

## English Pianist conducts classess

Mr. Peter Cooper, the English Pianist is now in Ceylon, not as an Examiner but as a teacher to conduct classes for Western Music Teachers in Sri Lanka.

Peter Cooper has been to Sri Lanka several times since 1956, as an Examiner for the Trinity College of Music (London) Examination. He generally ended up his Examining Schedule with a Piano Recital at Ladies College Hall.

This time his programme is different. He is conducting classes for Music Diploma Candidates at the Yamaha Music Centre. He will end up his lectures with Piano Recitals in Colmbo and Kandy during the third week of September.

*IN BRIEF*

- *Karunanilayam* — Miss Rani Jeyaratnam has taken the place of Miss Hutchins as Warden.
- *Christian Culture* — The University Grants Commission, we learn is making arrangements to widen the number of courses in Christian Culture.

The Christian Culture Department of the Kelaniya University has now 30 full time lecturers.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB/100/25/81*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 14th August, 1981.